<u>முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

<u>O.S. No. 481/2021</u>

<u>**Witness PW 2**</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகுமார் | தொழில் | |
| த/பெ | தட்சணாமூர்த்தி | வயது | |
| ஊர் | | தேதி | 18.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (18.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

<u>**சத்தியமாக சொல்கிறேன்**</u>

நானும் எனது அப்பாவும் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரி. எனக்கு 49 வயதாகின்றது. எனது அப்பா ஓட்டிய டிராக்டர் பதிவெண் எனக்கு தெரியுமா என்றால் PY Z 6048. மேற்சொன்ன பதிவெண்ணை எனது அப்பாவின் வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரி டிராக்டர் என்று சொல்லியுள்ளனர். 13.10.1983 ம் வருடம் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். அப்பொழுது எனக்கு சுமார் 7 அல்லது 8 வயது இருக்கும். 7 வயதிலேயே எனக்கு கிரையம் பற்றி தெரியும் என்றால் அந்தவயதில் நாங்கள் கிணற்றில் குதித்து விளையாடி கொண்டிருந்தோம். விளையாடுவது என்பது உடல் சார்ந்த சங்கதி என்றாலும் கிரையம் என்பது மூளை சம்பந்தமான சங்கதி என்றாலும் அந்த வயதிலேயே கிரையம் பற்றி தெரியும் என்றால் கிரையம் வாங்க போவதாக கூறியதால் தான் அங்கு சென்று விளையாடினோம்.நானும் எனது அப்பாவும் எங்களது சித்தப்பா வகையறாவுக்களுடன் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரி. சரியான சொத்து விவரம்தான் எனது சித்தப்பா குடும்பத்துடன் எனது அப்பா பாகம் பிரித்துகொண்டார் என்றால் பாக பத்திரத்தில் எ அட்டவணை சொத்தில் நான்கு எல்லைகளுக்குட்பட்ட சொத்துக்கள் சரியாக உள்ளது அதன் சர்வே எண் மாறியுள்ளதாக தெரிகின்றது. சர்வே எண் மாறியுள்ளது என்று நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வளவனூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் 2016ம் வருடம் கொடுத்துள்ளேன். அந்த புகாரின் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என்றால் சரி. நேரில் வந்தார்கள் பார்த்த பிறகு உங்களுடைய நிலம் உங்களிடம் உள்ளது என்று அவர்கள் நிலம் அவர்களிடம் உள்ளது என்றும் அதனால் நீதிமன்றம் சென்று பரிகாரம் கோரும்படி

சொல்லிவிட்டனர். சி.எஸ்.ஆர் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் ஒரு கடிதம்மட்டும் எழுதிகொடுத்தார்கள். 2016 ம் வருடத்திற்குபிறகு 2021 ல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரி. எனது அப்பா என்ன பரிகாரம்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்குதெரியுமா என்றால் தெரியும். எனது சித்தப்பாவிற்கு கொடுககப்பட்ட பாகத்தை எனது சித்தப்பா விற்பனை செய்துவிட்டார் என்ற விவரம் 2021 ல் தெரியும் எனது சித்தப்பா மகன்களிடம்பேசி பார்த்தோம் தேவன் என்பவரிம் பேசி பார்த்தோம் ஆனால் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. பாகபிரிவினைக்கு முன்பாக அந்த சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் எனது சித்தப்பா குடும்பம் தான் அங்கு இருந்தனர் என்றாலும் அந்த அனுபவத்தின் பேரில் தான் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது தவறு. 4வது பிரதிவாதி கிரையம பெற்றபின்னர் 4வது பிரதிவாதி அனுபவத்தில் உள்ளதால் 4வது பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் 1983 ம் வருடத்திலிருந்து எங்களது அனுபவத்தில் தான் உள்ளது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது அப்பாவின் வலியுறுத்தலின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 4வது பிரதிவாதியுடன் பேசி பதிவு செய்யப்பட்டதாக நான் சொல்லியுள்ள விவரம் தவறு என்றாலும் வேறு ஒரு நபருடன் பேசி அதனை பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalaskhmi)
I Additional Subordinate Judge,
Villupuram